**வனாத்தவில்லு பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 13 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வனாத்தவில்லு பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

06 அபிவிருத்தி முன்மொழிவுகளுக்காக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 149,096 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,137,766 தொகையான ஊழியர் கடன் உரிய பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 1,153,893 ஆக இருந்ததுடன் ரூபா 222,019 தொகையான நிலுவை வாடகை, வருமானம் தொடர்பாக ஒன்றிணைந்த கூற்றின் பிரகாரம் ரூபா 633,658 ஆக இருந்தது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெறவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 28,653,053 தொகையான பெறவேண்டிய கணக்குகளில் ரூபா 5,936,613 தொகை வருடமொன்றுக்கு மேற்பட்ட காலத்தைக் கொண்டிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,130,462 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளில் ரூபா 5,558,644 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

06 கணக்கு விடயங்களுக்குரிய பட்டோலைகள், சொத்துக்கள் பதிவேடு மற்றும் ஏக்கர் வரி பதிவேடுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 39,353,429 கூட்டுத்தொகையான சொத்துக்களை திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| 158 ஆம் பிரிவு | சபை அதிகாரப்பிரதேசத்தில் ஆதுனவரி மற்றும் ஏக்கர் வரி என்பன செலுத்தாது புறக்கணித்தவர்களின் அசையும் ஆதனங்களை தடுத்து வைத்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேுச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | |
| 203 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான சகல சொத்துக்களும் ஆண்டின் இறுதியின் போதும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,810,047 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,258,030 ஆக இருந்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

நிதி விளைவுகள் வீழ்ச்சியடைந்தமை தொடர்பாக மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பும் சபையில் உழைக்கப்படாத வருமானங்களின் குறைவும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 41 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 29 மில்லியன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.3.2 ஆதன வரி

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டிய ரூபா 999,771 தொகையான ஆதன வரிகளிலிருந்து ரூபா 719,681 தொகை வருடமொன்றை விஞ்சிய காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

### 2.3.3 வாடகை

ரூபா 222,019 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதில் காலதாமதம் காணப்பட்டது.

### 2.3.4 கடை வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,135,294 தொகையான நிலுவை கடை வாடகையில் ரூபா 714,952 தொகை 1 – 3 வருடங்களுக்கிடையிலும், ரூபா 67,019 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவிடப்படாது காணப்பட்டது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

வடமேல் மாகாண பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 887,668 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 5,572,779 தொகையான முத்திரைக் கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் ஏக்கர் வரி அறவிடப்படவேண்டிய காணிகளை இனங்காண்பதற்கும் அவற்றிலிருந்து வரித்தொகையை அறவிடுவதற்கும் பல வருட காலமாக நடவடிக்கை எடுக்காமல் கடந்த காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற ஏக்கர் வரி பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக சிட்டையிடல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கடை, வாடகை அடிப்படையில் வியாபாரிகளுக்கு வழங்கும் போது உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(இ) சபைக்குச் சொந்தமான இஸ்மாயில்புரம் பொது நூலகம் 2016 திசெம்பர் 21 ஆந் திகதி முதல் மூடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக பாதீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 6,072,779 தொகை பெறவேண்டிய முத்திரைக் கட்டணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டிற்காக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையில் நிறைவேற்றுத் தரத்தில் பதவியொன்று, இரண்டாம் தரத்தில் 10 பதவிகள் மற்றும் ஆரம்ப தரத்தில் 04 பதவிகள் என்பவற்றில் வெற்றிடம் காணப்பட்டதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஆரம்ப தரத்தில் 03 பதவிகளில் 11 பேர் அமைய அடிப்படையிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளுக்குப் புறம்பாக இரண்டாம் தரத்தில் பதவியொன்றில் 08 ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் கங்கே வாடிய சுற்றுலா விடுதி 2015 மே 13 ஆந் திகதி முதல் 30 வருட வாடகைக் காலத்திற்காக எவ்வித விலை மதிப்பீடு மற்றும் பெறுகை நடைமுறைகளின்றி ரூபா 30,100 தொகையான மாதாந்த வாடகைத் தொகைக்கும் மற்றும் வருடாந்தம் 10 சதவீதத்தால் வாடகைப் பணத்தை அதிகரிக்கும் அடிப்படையிலும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், சுனாமி அனர்த்த சந்தர்ப்பத்தின் போது சபைக்கு நிதியுதவியாகக் கிடைத்த 125 குதிரை வலுக் கொண்ட இயந்திரத்துடனான பைபர் படகும் 2016 சனவரி முதல் மாதாந்தம் ரூபா 15,100 வாடகை அடிப்படையில் மேற்கூறப்பட்ட வாடகையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) வனாத்தவில்லு மற்றும் கரதிவ் பொது நூலகங்களில் காணாமல் போன 657 புத்தகங்களின் பெறுமதியான ரூபா 109,945 இனை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,947,090 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்பசளை தளத்தில் நாளாந்த உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தேவையான ஊழியர்கள் போதியளவில் ஈடுபடுத்தப்படாமையின் அடிப்படையில் உரிய செயற்திட்டம் செயற்பாடற்ற நிலைக்கு உள்ளாகியிருந்தது.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 1,070,000 பெறுமதியான 19 சொத்துக்கள் 01 வருடம் முதல் 06 வருடங்களுக்கிடையிலான காலவீச்சில் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 37,642,000 தொகையாக இருந்ததுடன் அது உள்ளபடியாக ரூபா 10,655,502 ஆனமையால் மீளாய்வாண்டின் செலவினம் பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினத்தில் 28 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பான நலிவுகள் அவ்வவ்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமானத்தைச் சேகரித்தல் | நிலுவை வருமானம் வருடா வருடம் அதிகரித்தமை மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நூலக நிர்வாகம் | வாசகர் சமூகத்தை வலுப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை |
| (இ) | பதிவேடுகளின் பராமரிப்பு | உபயோகப் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. (உதாரணம்: கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு) |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு செய்யப்பட்ட சபை நிதியத்தின் மூலம் எவ்வித செயற்திட்டமும் அமுல்படுத்தப்படாமை |
| (உ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | கழிவுவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாமையின் அடிப்படையில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களை சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அகற்றியமை. |